# அரச அச்சகக் கூட்டுத்தாபனம்

# வெற்றிடங்கள் – 2026

அரச அச்சகக் கூட்டுத்தாபனம், வர்த்தக அச்சிடல், பாதுகாப்பு அச்சிடல், வெளியிடல் மற்றும் எழுதுபொருட்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபடும் நன்கு நிறுவப்பட்ட இலாபம் ஈட்டும் வர்த்தக நிறுவனமாகும். இந்நிறுவனம் பின்வரும் வெற்றிடங்களுக்காக சிறந்த களப் பதிவைப் பெற்ற சுறுசுறுப்பான மற்றும் இலக்குகளை அடையும் திறன் கொண்ட இலங்கையர்களை தேடுகிறது.

**01. முகாமையாளர் பதவி (பொறியியல்) – (HM 1-1)**
**(பதவி 01)**
**பணி விபரம்**

நிறுவனத்தின் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை (KPIs) அடைவதற்காக பொறியியல் துறை / பராமரிப்புத் துறைக்குத் தலைமை தாங்கி, அத்துறையின் செயல்திறனை மேம்படுத்துதல், தொழில்நுட்பக் குழுக்களை மேற்பார்வை செய்தல், தடுப்பு பராமரிப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு முறைமைகளை நடைமுறைப்படுத்துதல், பொறியியல் உட்கட்டமைப்புகளை நிர்வகித்தல், சக்தி வினைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் உபகரணங்களின் நம்பகத்தன்மையையும் உற்பத்தி இலக்குகளையும் உறுதிப்படுத்தும் வகையில் உற்பத்தித் திட்டமிடல் பிரிவுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.

**தகைமைகள்: கல்வி**

**வெளிவாரி அபேட்சகர்கள்: (கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பொறிமுறை பொறியியல் அல்லது மின் பொறியியலில் இளமாணி பட்டம் ஒன்று

   **அத்துடன்**

   பட்டய பொறியியலாளர் ஒருவராக இலங்கை பொறியியல் சபையில் (ECSL) பதிவுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றில் (IESL) கூட்டு அங்கத்துவம்.

   **மற்றும்**

   முதலாவது பட்டப்படிப்பைப் பெற்ற பின்னர், தொடர்புடைய துறையில் அரச நிறுவனம் / கூட்டுத்தாபனம் / சட்டபூர்வ சபை நிறுவனமொன்றில் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் ‘‘முகாமைத்துவ மட்டத்தில்’’ குறைந்தது 13 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2. பட்டய பொறியியலாளர் ஒருவராக இலங்கை பொறியியல் சபையில் (ECSL) பதிவுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் (IESL) KO/ சக அங்கத்துவம்.

   **மற்றும்**

   அரச நிறுவனம் / கூட்டுத்தாபனம் / சட்டபூர்வ சபை நிறுவனமொன்றில் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் ‘‘முகாமைத்துவ மட்டத்தில்’’ குறைந்தது 13 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் தரம் ஐ முகாமைத்துவ பிரிவில் (MM) பதவி ஒன்றில் குறைந்தது மூன்று (3) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் பட்டய பொறியியலாளர் ஒருவராக இலங்கை பொறியியல் சபையில் (ECSL) பதிவுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் (IESL) பட்டய அங்கத்துவம்.

**ஆட்சேர்ப்பு முறை: கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை**

**வயது வரம்பு:**

35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு:**

2027.01.01 இல் இருந்து அமுலுக்கு வரும்

HM 1-1 2025

2025.03.25 இன் 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி

| முகாமையாளர் (பொறியியல்) – ( HM 1-1 ) | |
|---|---|
| 01.01.2026 | 01.01.2027 |
| ரூபா 123,019/- | ரூபா 140,640/- |

**சேவை நிபந்தனைகள்:**

மேலுள்ள பதவி நிரந்தரமானது மற்றும் மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். முந்தைய பதவியை ஏற்கனவே உறுதி செய்திருக்கும் உள்ளக தெரிவின் மூலம் தேர்வு செய்யப்படும் பணியாளர் ஓர் (01) ஆண்டு காலம் பதில் கடமைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்.

**கொடுப்பனவுகள்**

சம்பளத்திற்கு மேலதிகமாக இந்தப் பதவிக்கு பின்வரும் கொடுப்பனவுகள் பொருந்தும்.

- சுற்றுநிருபங்களுக்கு அமைய அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்
- வருகைக்கான ஊக்கத்தொகை
- உணவு கொடுப்பனவு

**ஏனைய மேலதிக சலுகைகள்**

- ஊழியர் மற்றும் அவரது குடும்பத்தினரை உள்ளடக்கிய மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- KPI அடிப்படையிலான ஊக்கத் தொகை முறைமை
- EPF மற்றும் ETF
- பயன்படுத்தப்படாத விடுப்புகளை பணமாக்கல்

**01. திட்ட முகாமையாளர் பதவி (ஒப்பந்த அடிப்படை)**

**(பதவி 01)**

**பணி விபரம்**

உள்ளக மற்றும் வெளிப்புறப் பங்குதாரர்களுடன் இணைந்து திட்டச் செயற்படுத்தலை ஒருங்கிணைத்தல், கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மீளாய்வுகளை ஏற்பாடு செய்தல், KPI மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துதல், திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணித்து முகாமைத்துவத்திற்கும் பணிப்பாளர் சபைக்கும் அறிக்கையிடுதல், அத்துடன் நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமையை நிறுவுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஆதரவளித்தல்.

**தகைமைகள்**: கல்வி

**வெளிவாரி அபேட்சகர்கள்**: கீழுள்ள 1 அல்லது 2)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், வர்த்தக நிர்வாகம் அல்லது எந்தவொரு பட்டப்படிப்பு துறையிலும் இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

திட்ட முகாமைத்துவம் அல்லது தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

ஆட்சேர்ப்பு முறை: கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**வயது வரம்பு**:

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு**: ரூபா 99,510/- (அனைத்து கொடுப்பனவுகளுடனும்)

**காலம்:** 01 ஆண்டு ஒப்பந்தக் காலத்திற்காக

**விண்ணப்பித்தல்:**

2026.11.10 ஆம் திகதியன்று தொடர்புடைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், தமது தகைமைகளை உறுதிப்படுத்தக்கூடிய கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், வேலை அனுபவம் மற்றும் பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்புடையதாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கம் / பொது நிறுவனங்கள் / கூட்டுத்தாபனங்கள் / சபைகள் ஆகியவற்றில் ஏற்கனவே பணியாற்றுபவர்கள், தமது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், விண்ணப்பத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் ‘‘தலைவர், அரச அச்சகக் கூட்டுத்தாபனம், பனாலுவ, பாதுக்க’’ என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது 2026.11.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு நேரில் கையளிக்கப்படுதல் வேண்டும்.

தாமதிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அவை தொடர்பில் ஆட்சேர்ப்புகளுக்கான தகுதிவாய்ந்த அதிகாரி தீர்மானிப்பார். எந்தவொரு வகையிலான செல்வாக்கைச் செலுத்தலும் தகுதியிழப்புக்குக் காரணமாக அமையும்.

**தலைவர்,**
**அரச அச்சகக் கூட்டுத்தாபனம்,**
**பனாலுவ, பாதுக்க.**

SPC